

முதலமைச்சர் கோப்பைக்கான கபடி விளையாட்டில் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் மிகச் சிறப்பாக விளையாடி மூன்றாவது பரிசினை வென்றனர் .இதனை தொடர்ந்து வனத்துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோரை சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றனர். விழுப்புரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒருங்கிணைப்பாளர் வாலிபால் மணி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி:

# திருச்சி - மத்திய - வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்

## மாவட்டச் செயலாளர்கள் க. வைரமணி - ந. தியாகராஜன் வேண்டுகோள்!





திருச்சி, நவ.3-

திருச்சி மத்திய, மாவட்ட தி.மு.க. செயலாளர் க. வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

1.01.2025 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியன்று 18 வயது பூர்த்தியடையக் கூடிய புதிய வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி ஏற்படும் நாளாக கொண்டு இந்திய தேர்தல் ஆணையம் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

மேலும், வாக்காளர்களை சேர்ப்பதற்கும், நீக்குவதற்கும், திருத்தம் செய்திடவும் சிறப்பு முகாம்கள் 16.11.2024, 17.11.2024 சனி, ஞாயிறு மற்றும் 23.11.2024, 24.11.2024 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் நடைபெற இருக்கிறது.

இந்தப் பணிகளில் மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பாக பணியாற்றிட வேண்டுகிறோம். இந்தபணிகளில் வாக்குசாவடி நிலைய முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி அளவிலான குழு உறுப்பினர்கள் (BLC) அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ள வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### சென்னை திரும்பும் மக்களுக்காக

# காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே சிறப்பு ரெயில்!

## நவ. 4-ஆம் தேதி வரை விடப்படுகிறது!!

சென்னை, நவ.3-

சென்னை திரும்பி வரும் மக்களின் வசதிக்காக காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே 4-ஆம் தேதி சிறப்பு ரெயில் இயக்கப்படும் என ரெயில்வே இலாகா அறிவித்துள்ளது.

தீபாவளியை கொண்டாடுவதற்காக சென்னையில் இருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளார்கள். இவர்களுக்காக அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

மேலும் தனியார் ஆம்னி பஸ்களும் அதிக அளவில் விடப்பட்டன. ரெயில்களிலும் ஏராளமான மக்கள் சென்றார்கள்.

இன்று முதல் 4-ஆம் தேதி வரை சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகின்றன. வழக்கமான பஸ்களும் இயங்கும். இந்த 3 நாட்களில் மொத்தம் 12,848 பஸ்கள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

சென்னைக்கு வரக்கூடிய பஸ்கள் அனைத்தும் கிளாம்பாக்கத்துடன் நிறுத்தப்படும். அங்கிருந்து மாற்று வாகனம் பிடித்து பயணிகள் சென்னை நகருக்குள் வருவார்கள்.

இவர்களுக்காக மாநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால் இது போதுமானதாக இருக்காது. குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை மக்கள் அதிக அளவில் புறப்பட்டு திங்கட் கிழமை காலையில் சென்னைக்கு வருவார்கள்.

இவர்களின் நலன் கருதி ரெயில்வே துறை சார்பில் சிறப்பு மின்சார ரெயில்கள் விடப்படுகின்றன. பொதுவாக சென்னை கடற்கரை - தாம்பரம் இடையே அதிக அளவில் மின்சார ரெயில்கள் இயக்கப்படுகின்றன. அதைவிட சற்று குறைந்த அளவில் கடற்கரை - செங்கல்பட்டு இடையே இயக்கப்படுகின்றன.

கிளாம்பாக்கம் பஸ் முனையம் வண்டலூருக்கும், ஊரப்பாக்கம் ரெயில் நிலையத்துக்கும் இடையே அமைந்துள்ளது. கிளாம்பாக்கத்தில் இறங்கும் பயணிகள் சற்று தூரம் நடந்து சென்றுதான் இந்த ரெயில் நிலையங்களை அடைய முடியும்.

ஆகவே கிளாம்பாக்கத்தை அடையும் முன்னரே காட்டாங்கொளத்தூர், பொத்தேரி, கூடுவாஞ்சேரி ஆகிய இடங்களில் மக்கள் இறங்கிக் கொள்வார்கள். அவர்களின் நலன் கருதி நவம்பர் 4-ஆம் தேதி அன்று காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 4.30, 5.00, 5.45, 6.20 ஆகிய மணி நேரத்தில் காட்டாங்கொளத்தூரில் இருந்து சிறப்பு ரெயில்கள் புறப்படும். இந்த ரெயில் பொத்தேரி, கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், வண்டலூர், பெருங்களத்தூர் ஆகிய ரெயில் நிலையங் களில் நின்று செல்லும்.

அதுபோல் தாம்பரத்தில் இருந்து 5.05, 5.40 ஆகிய மணி நேரத்தில் 2 சிறப்பு ரெயில்கள் காட்டாங்கொளத்தூர் வரை இயக்கப்படும்.

### ‘அமரன்’ திரைப்படம் பார்த்து –

### எங்கள் உழைப்பைப் பாராட்டிய முதல்வருக்கு நன்றி!

# ஒரு அரசு அதிகாரியின் மகனான எனக்கு - இது ஒரு மறக்க முடியாத நிகழ்வு!

## நடிகர் சிவகார்த்திகேயன் வலைதளப் பதிவு



சென்னை, நவ.3-

‘அமரன்’ திரைப்படத்தைப் பார்த்து, அதில் நடித்த கலைஞர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டதையொட்டி, அதற்கு நன்றி தெரிவித்து நடிகர் சிவகார்த்திகேயன் விடுத்துள்ள பதிவில், “ஒரு அரசு அதிகாரியின் மகனான எனக்கு இந்த நிகழ்வு மறக்க முடியாது” என்று குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் சிவகார்த்திகேயனின் வலைதளப் பதிவு வருமாறு:-

**தங்களின் நேரத்தை ஒதுக்கி அமரன் திரைப் படத்தைப் பார்த்து, எங்கள் அனைவரின் உழைப்பையும் பாராட்டிய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.**

**ஒரு அரசு அதிகாரியின் மகனான எனக்கு இந்த நிகழ்வு மறக்க முடியாதது.**

இவ்வாறு அப்பதிவில் நடிகர் சிவகார்த்திகேயன் குறிப்பிட்டுள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகர பொருளாளர் ராமச்சந்திரன் அவர்களின் சகோதரர் ராஜசேகர் வீடு கடந்த 29.10.2024 அன்று இரவு தீடீர் தீ விபத்து ஏற்பட்டு சேதாரம் அடைந்தது. 1.11.2024 அன்று கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நேரில் சென்று தீ விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி உரிய நிவாரணம் கிடைக்க அதிகாரிகளிடம் போனில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், பர்கத் அலி, மணிகண்டன், பாஸ்கரன், ராமச்சந்திரன், விஜய் ஈஸ்வரன், ஆடிட்டர் வேல்முருகன், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# குற்றால அருவிகளில் குளிக்கத் தடை!

தென்காசி,நவ.3-


மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு பெய்த மழை காரணமாக தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக நேற்று முன்தினம் காலை ஐந்தருவி, மெயின் அருவி, பழைய குற்றால அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து 5 மணிநேரம் களித்து அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்நிலையில், தற்போது மாலை நேரத்தில் தென்காசி, குற்றாலம், செங்கோட்டை, மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் மழை பெய்யத்தொடங்கியுள்ளது.

மழை பெய்து வருவதால் அருவிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஐந்தருவி, மெயின் அருவி, பழைய குற்றால அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி விடுமுறையை சுற்றுலா பயணிகள் குற்றாலத்தில் குவிந்துள்ள நிலையில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால் பலரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.



**புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்;**
**உலகத்தையே புத்தகமாகப் படித்தால் அனுபவம் தழைக்கும்"**
**...கலைஞர்...**

### டி.ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

# அம்பத்தூரில் கழக கருத்தியல் பேச்சரங்கம்!

## பர்வின் சுல்தானா - தஞ்சை கோ.வியானி விஷ்வா - அ.தா.டெக்சின் சிறப்புரை!

## பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை!

சென்னை, நவ.3-

அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில் என் உயிரினும் மேலான.... பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்களின் கழக கருத்தியல் நிகழ்ச்சி வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க அம்பத்தூர் சட்டமன்ற திமுக சார்பில் என் உயிரினும் மேலான.... பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்களின் கழக கருத்தியல் நிகழ்ச்சி இன்று (03.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ் அருகில் உள்ள பி.எஸ்.பி கன்வென்ஷன் மஹாலில் (PSB CONVENTION MAHAL) அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு கழக பொருளாளரும் நாடாளுமன்றத் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடகிழக்கு மாவட்டம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளருமான பி.முனியான்டி, த.செ.கு.உறுப்பினர், அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி தெற்கு பகுதி கழக செயலாளரும் மாமன்ற துணை தலைவருமான டி.எஸ்.பி. இராஜகோபால் கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் மரு.அணி.அமை ஜி.சாந்தகுமாரி த.செ.கு.உ. ரமேஷ்(எ)நீலகண்டன், மா.ஆதி.நல.அ எல்.பி.எப். மோகன் த. பொது.கு.உ ஏபி.பூர்ணிமா எம்.சி., மா.மீனவ.அமை து.ஆயிரம், மா.அமைப்பு சாரா ஒட்டுநர்.அ.அ கு.கிருஷ்ணமூர்த்தி, மா.இ.அ.து.அ ஜெ.பாலமுருகன் மற்றும்

அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு அ.செல்வம் க.கதீஜா, மா.இரமேஷ், வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா வெ.இராதாகிருஷ்ணன் மு.இரகு, எம்.கமல் எம்.சி, மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி எம்.சி, எஸ்.உமாசந்தானம் எம்.சி., உஷாநாகராஜ் எம்.சி., ஆகியோரின் முன்னிலையில் அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ் ரவி க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா. குப்புசாமி, எம். ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி ஆ. இரா,அருண், கோ.சேகர்லால் ஆகியோரின் வரவேற்பில் இக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் முனைவர் பர்வின் சுல்தானா, திராவிட மாடலே தேசத்தின் தீர்வு - தஞ்சை ஜோ. வியானி விஷ்வா, எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் எப்போதும் வெற்றியைப் படைக்கும் அ.தா. டெக்சின் ரொமேரியோ ஆகியோர் பங்கேற்று பேருரையாற்றுகிறார்கள்.

எனவே இக்கூட்டத்திற்கு தெற்கு மற்றும் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் அம்பத்தூர் தெற்கு, கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் பாகநிலை முகவர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அம்பத்தூர் வடக்கு பகுதி 85வது வட்ட கழக செயலாளர் த.கண்ணபிரான் நன்றியுரை வழங்குகிறார்.

# முதல்வரின் பாராட்டு; ‘அமரனின்’ பெரும் வெற்றிக்கு அறிகுறி!

## கலைஞானி கமல்ஹாசன் நன்றி!



சென்னை, நவ. 3-

கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், “முதல்வரின் பாராட்டு; ‘அமரன்’ திரைப்படத்தின் பெரும் வெற்றிக்கு அறிகுறி” என்று குறிப்பிட்டுள்ளார்.

கலைஞானி கமல்ஹாசன் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**எங்களது அழைப்பை ஏற்று ‘அமரன்’ திரைப்படத்தைப் பார்த்து ரசித்ததோடு, படத்தையும், அதில் பங்களிப்பாற்றிய கலைஞர்களையும் மனதாரப் பாராட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர், என் அன்பிற்கினிய நண்பர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும்,**

**தமிழ்நாட்டின் துணை முதல்வர், என் அன்பு இளவல் உதயநிதி அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி.**

**முதல்வரின் பாராட்டு; அமரனின் பெரும் வெற்றிக்கு அறிகுறி.**

இவ்வாறு அப்பதிவில் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; “ நம் நாட்டின் பலம் சனாதன தர்மத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது” என்று உத்தரப் பிரதேச பா.ஜ.க. முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறியிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; தீபாவளியை ஒட்டி அவர் அப்படிக் கூறியிருக்கிறார்.**

**பொருளாதார முன்னேற்றம், வறுமையை ஒழித்து வளம் காண்பதில் மேம்பாடு, சமத்துவம் - சமூக நீதி - ஜனநாயகம் - ஆகிய முனைகளில் இடையறாத விழிப்புணர்வுடன் கூடிய கவனம், ஆகியவற்றில் இருக்கிறது நாட்டின் பலம் என்பது அறிஞர்களின் நிலைப்பாடு.**

**அவற்றையெல்லாம் தவிர்த்துவிட்டு, சனாதன தர்மம் எனக் கூறுவதிலிருந்து, அவற்றில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தோல்வி அடைந்துவிட்டதை அவரே ஒப்புக் கொள்கிறாரோ ?**